# பத்திரிக்கை செய்தி

## வீட்டுமனை வரைபட அனுமதி வழங்குவதற்காக ரூ.20,000/- லஞ்சம் வாங்கிய நகர திட்ட அதிகாரி கைது

புகார்தாரர் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சியில் பதிவுபெற்ற பொறியாளராக இருந்து வருகிறார். அவர் தனது வாடிக்கையாளருக்கு சொந்தமான பரமக்குடியில் உள்ள நான்கு வீட்டு மனைகளுக்கு பரமக்குடி நகராட்சியில் திட்ட அனுமதி பெற பரமக்குடி நகராட்சியில் வரைபட திட்ட அனுமதி கட்டணமாக ரூ.76,850/-யை செலுத்தியுள்ளார். பின்னர் இது தொடர்பாக பரமக்குடி நகராட்சி வரைபட அனுமதி அதிகாரி திரு.பர்குணன் ரூ.5,000/-ம் வீதம் 4 வீட்டு மனைகளுக்கு மொத்தம் ரூ.20,000/-யை தனக்கு தனியாக கொடுத்தால் தான் வரைபட அனுமதி தயார் செய்து பரிந்துரை செய்வேன் எனக்கூறியுள்ளார். அதற்கு புகார்தாரர் அரசு பணம் ரூ.76,850/-யை கட்டியாச்சு, மேலும் உங்களுக்கு ரூ.20,000/-யை தன்னால் கொடுக்க இயலாது எனவே தயவு செய்து தனது வரைபட திட்ட அனுமதியை பரிந்துரை செய்யுமாறு கேட்டுள்ளார். திரு.பர்குணன், நகராட்சி வரைபட அனுமதி அதிகாரி லஞ்ச பணம் ரூ.20,000/-யை இன்றைக்கே கொடுத்தால்தான் அனுமதி வழங்குவேன் இல்லையேல் கோப்புகள் அப்படியே தான் கிடக்கும் என புகார்தாரரிடம் கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் இது குறித்து ராமநாதபுரம் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறையில் திரு.பர்குணன், நகராட்சி வரைபட அனுமதி அதிகாரி மீது நடவடிக்கை எடுக்குமாறு நேற்று (23.01.2025) புகார் அளித்துள்ளார். அந்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் திரு.பர்குணனை பொறி வைத்து பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டனர். திரு.பர்குணன், நகராட்சி வரைபட அனுமதி அதிகாரி புகார்தாரரிடம் கூகுல் பே மூலம் லஞ்ச பணத்தை அனுப்புமாறு கேட்டதால் புகார்தாரர் லஞ்ச பணத்தை கூகுல் பே மூலம் அனுப்பினார். பின்பு நேற்று (23.01.2025) திரு.பர்குணன், நகராட்சி வரைபட அனுமதி அதிகாரியை ராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு துறையினர் கைது செய்தனர்.